பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

14 04 2025 Monday 7 15 Pm

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வக்ஃப் திருத்தச் சட்டத்தின் மூலம் ஏழை இஸ்லாமியர்கள் பயனடைவார்கள் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- நாட்டின் வளர்ச்சி மற்றும் சமூக நல்லிணக்கத்தில் பாரத ரத்னா அம்பேத்கர் உறுதியுடன் இருந்ததாக ஆர்.எஸ்.எஸ். தலைவர் திரு. மோகன் பகவத் கூறியுள்ளார்

- அம்பேத்கரின் பெயரை எதிர்க்கட்சிகள் அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்துவதாக மத்திய அமைச்சர் திரு. வீரேந்திர குமார் குற்றம் சாட்டியுள்ளார்.

- ஈக்வெடார் அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் திரு. Daniel Noboa வெற்றி பெற்றுள்ளார்.

- Abidjan சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Adil Kalyanpur பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>

வக்ஃப் திருத்தச் சட்டத்தின் மூலம் ஏழை இஸ்லாமியர்கள் பயனடைவார்கள் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம், Hisar-ல் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

ஏழை மற்றும் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களின் உரிமைகள் இதன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

விரிவான ஆலோசனைக்குப் பிறகே வக்ஃப் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக நாளேடுகளுக்கு தாம் எழுதிய கட்டுரைகளை பகிர்ந்துள்ளார்.

சட்டமேதை அம்பேத்கரின் எண்ணங்களை பூர்த்தி செய்யும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<<<<>>>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், தமது நாடாளுமன்றத்தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், தத்தெடுத்துள்ள கிராமத்தின் வளர்ச்சி குறித்து இன்று குஜராத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் நர்மதா மாவட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் திருப்தி அளிப்பதாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

திரு. ஜெய்சங்கர், அடுத்த இரண்டு நாட்களுக்கும் இந்த ஆய்வினை தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<<>>>>>>>

பாரத ரத்னா அம்பேத்கரின் கனவை நனவாக்கும் வகையில் நாட்டு மக்கள் அனைவரும் பணியாற்ற வேண்டும் என்று மகாராஷ்ட்ர மாநில ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அரசியல் சாசன சிற்பி அம்பேத்கர் காட்டிய பாதையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பயணிப்பதாக கூறினார்.

மும்பையில் கட்டப்பட்டு வரும் அம்பேத்கர் நினைவகம், எதிர்கால சந்ததியினருக்கு உந்து சக்தியாக இருக்கும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<<<<>>>>>>>

அம்பேத்கரின் பெயரை எதிர்க்கட்சிகள் அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்துவதாக மத்திய அமைச்சர் திரு. வீரேந்திர குமார் குற்றம் சாட்டியுள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், அம்பேத்கரின் கனவை நனவாக்க எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளவில்லை என்றார்.

அரசியல்சாசன புத்தகத்தை தற்போது கையில் எடுத்து பிரச்சாரம் மேற்கொள்ளும் கட்சி தான் அவசர நிலையை பிரகடனப்படுத்தியதாகவும் திரு. வீரேந்திர குமார் குறை கூறினார்.

<<<<<<<<<>>>>>>>

இந்தியாவை வல்லரசாக உருவாக்குவதற்கான பாதையை வகுத்துக் கொடுத்தவர் சட்டமேதை அம்பேத்கர் என்று மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் அம்பேத்கரின் சிலையை திறந்து வைத்து அவர் பேசினார்.

ஏழை மக்களின் மேம்பாட்டிற்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர் அம்பேத்கர் என்று அவர் புகழாரம் சூட்டினார்.

அம்பேத்கரின் சிந்தனைகள் இன்றளவும் உந்துசக்தியாக உள்ளது என்று திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்தார்.

<<<<<<<<<>>>>>>>

நாட்டின் வளர்ச்சி மற்றும் சமூக நல்லிணக்கத்தில் பாரத ரத்னா அம்பேத்கர் உறுதியுடன் இருந்ததாக ஆர்.எஸ்.எஸ். தலைவர் திரு. மோகன் பகவத் கூறியுள்ளார்.

கான்பூரில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் புதிய மண்டல அலுவலகத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

ஹிந்துக்களை ஒருங்கிணைப்பதற்காக தம் வாழ்நாள் முழுவதும் முயற்சிகளை மேற்கொண்டவர் அம்பேத்கர் என்றும் திரு. மோகன் பகவத் தெரிவித்தார்.

<<<<<<<<<>>>>>>>

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டியை பிரதமர் திரு. நரேந்திர மோடி, அடுத்த மாதம் 4ஆம் தேதி தொடங்கி வைக்கவுள்ளதாக பீகார்முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் கூறியுள்ளார்.

இன்று பாட்னாவில் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவுடன் இணைந்து, இதற்காக இலச்சினையை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இதுபோன்ற போட்டிகள் பீகாரில் நடைபெறுவது மாநிலத்தில் உள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த உதவிடும் என்று திரு. நிதிஷ்குமார் தெரிவித்தார்.

<<<<<<<<<>>>>>>>

நாட்டின் வளர்ச்சியில் உத்தரபிரதேசம் முக்கியப் பங்கு வகிப்பதாக முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

லக்னோவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உத்தரபிரதேசத்தில் பிஜேபி அரசு பொறுப்பேற்ற பின்னர், மாநிலம் உயர் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக கூறினார்.

சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதாகவும், இதன் காரணமாக மாநிலத்தில் தொழில் முதலீடுகள் அதிகரித்துள்ளதாகவும் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>

தெலங்கானாவில் அமைப்பு சாரா மற்றும் நடைபாதை தொழிலாளர்களின் நலனுக்கான வரைவு மசோதா விரைவில் இறுதி செய்யப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

இன்று ஹைதராபாதில் இதுதொடர்பாக அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

இந்த வரைவு மசோதாவை விரைவில் வெளியிட்டு பொதுமக்களிடம் கருத்துக்களை கோர வேண்டும் என்றும் அவர் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.

அடுத்த மாதம் 25ஆம் தேதிக்குள் இம்மசோதா இறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இந்த மசோதா நாட்டிற்கே வழிகாட்டியாக இருக்கும் என்றும் திரு. ரேவந்த் ரெட்டி கூறினார்.

<<<<<<<<<>>>>>>>

மேற்குவங்கத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 200க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

முர்ஷிதாபாதில் வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, நேரிட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அம்மாவட்டத்தில் தற்போது நிலைமை கட்டுக்குள் உள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்பட்டு, இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<<<<>>>>>>>

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி அரசியல் சாசனத்தை தங்கள் சட்டைப் பையில் வைத்துக் கொண்டிருப்பதாகவும், பிஜேபி கூட்டணி இதயத்தில் வைத்திருப்பதாகவும் பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. Sudhansu Trivedi தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வக்ஃப் சட்டத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் தெரிவித்து வரும் கருத்துக்கள் ஏற்புடையதல்ல என்றார்.

மத்திய சட்டத்திற்கு எதிராக மாநில அரசுகள் செயல்பட முடியாது என்றும் திரு. Sudhansu Trivedi கூறினார்.

<<<<<<<<<>>>>>>>

ஈக்வெடார் அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் திரு. Daniel Noboa வெற்றி பெற்றுள்ளார்.

55 புள்ளி எட்டு ஐந்து சதவீத வாக்குகளை பெற்று அவர் வெற்றிபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றி வரலாற்றுச் சிறப்புமிக்கது திரு. Daniel Noboa கூறியுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>

சீன அதிபர் திரு. Xi Jinping அரசுமுறைப் பயணமாக வியட்நாம் சென்றடைந்தார்.

வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் விடுத்த அழைப்பை ஏற்று, சீன அதிபர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<<>>>>>>>

ஜப்பான் மக்கள் தொகை தொடர்ந்து 14வது ஆண்டாக குறைந்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது 5 லட்சத்து 50 ஆயிரம் என்ற அளவிற்கு மக்கள் தொகை குறைந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<<<>>>>>>>

Abidjan சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Adil Kalyanpur பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் அவர் 6-3, 6-4 என்ற செட்கணக்கில் ருமேனியாவின் Dragos Nicolae Cazacu-வை வென்றார்.

<<<<<<<<<>>>>>>>

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Manas Dhamne பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் அவர் 6-2, 6-0 என்ற செட்கணக்கில் இத்தாலியின் Simone Agostini-யை வென்றார்.

<<<<<<<<<>>>>>>>

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை – லக்னோ அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ளது.

லக்னோவில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற சென்னை அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

<<<<<<<<<>>>>>>>

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஹாக்கி போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Salima Tete தலைமையிலான இந்த அணியில் ஷர்மிளா தேவி, பூஜா யாதவ் உட்பட 26 பேர் இடம்பெற்றுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் வரும் 21ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 5ஆம் தேதிவரை ஐந்து போட்டிகள் நடைபெறவுள்ளன.

முதலில் ஆஸ்திரேலியா-ஏ அணிக்கு எதிராக 2 போட்டிகளிலும், இதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான 3 போட்டிகளிலும் இந்தியா பங்கேற்கிறது.

<<<<<<<<<<>>>>>>>

லடாக்கில் வருடாந்திர விளையாட்டுப் போட்டிகள் இன்று நடைபெற்றன.

<<<<<<<<<<END>>>>>>>